# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

(பன்னாட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)

ISBN: 978-93-87865-06-8

தொகுதி – 2

( 28.9.2018, 29.9.2018 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்த்துறையினரால் வெளியிடப்பட்டது )

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ஆ. பாப்பி கமலா பாய், தமிழ்த்துறைத் தலைவர்

முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி

முனைவர் இரா. டயானா கிறிஸ்டி

முனைவர் இரா. ஏஞ்சல்

திருமதி பா. திவ்யா

திருமதி டே. ஆனி மரிய ஜான்சி

வெளியீடு

**தமிழ் உயராய்வு மையம்**

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)**

**மதுரை - 18**

Scanned with CamScanner

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 30. | செல்வன் ஜில் டேனியல் தங்கராஜ், பா. | திருவிவிலியத்தில் மனிதநேயம் | 111 |
| 31. | ஜீவராணி, த. | சமய நல்லிணக்கத்திற்கு இயேசுவின் பங்களிப்பு | 116 |
| 32. | செல்வி ஜுலியட் தேவகிருபை,க. | திருவிவிலியம் காட்டும் அன்பும் சகோதரத்துவமும் | 120 |
| 33. | திருமதி ஜெபமேரி, ம. | திருவிவிலியத்தில் ரூத் | 123 |
| 34. | செல்வி ஜெயப்பிரியங்கா, இர. | திருவிவிலிய நீதிமொழிகள் காட்டும் அறச்சிந்தனைகள் | 127 |
| 35. | திருமதி ஜெனிபர், ரா. | கிறித்தவமும் தமிழும் | 130 |
| 36. | ஜேனட் பெல்சியாள், ஞா. | விவிலியத்தில் வாழ்வியல் மதிப்பீடுகள் | 134 |
| | **காப்பியம்** | | |
| வ. எண் | பெயர் | தலைப்பு | |
| 37. | முனைவர் அலமேலு, லெ. | தேம்பாவணியில் இயற்கையும் மனிதமும் | 137 |
| 38. | முனைவர் அலிபிநிஷா, மு. | சிலுவைப்பாட்டில் மனிதம் | 140 |
| 39. | அஜிதா, நா. | தேம்பாவணியில் தாவீதன் இறைவன் மீது கொண்ட பற்று | 145 |
| 40. | திரு. கருணாகரன், கோ. | வளன் சனித்த படலம் கூறும் தாவீது அரசனின் உயர் பண்புகள் | 147 |
| 41. | திருமதி கார்த்திகாயினி, வி. | கிறித்தவக் காப்பியங்கள் காட்டும் மனிதநேயம் | 151 |
| 42. | திரு. சங்கர், இர. | இரட்சணிய மனோகரம் காட்டும் மனித மதிப்பீடுகள் | 155 |
| 43. | திருமதி சித்ராதேவி, த. | கிறித்தவ இலக்கியங்களும் மனித மதிப்பீடுகளும் | 159 |
| 44. | முனைவர் சுபாசினி, பெ. | தேம்பாவணி காப்பியத்தில் காணலாகும் அறச்சிந்தனைகள் | 164 |
| 45. | முனைவர் சுஜாதா, க. | அன்னையின் பெருமைகள் | 166 |
| 46. | முனைவர் சூசை ஜெஸிந்தா மெர்ஸி, ஜோ. | தேம்பாவணியில் வளனின் மாண்புகள் | 169 |
| 47. | திருமதி செல்வகனி, ரா. | திருக்காவலூர் அடைக்கல அன்னையின் மேன்மைகள் | 172 |
| 48. | முனைவர் சொர்ணமாலா, சி. | தேம்பாவணியில் வாழ்வியல் அறம் | 176 |
| 49. | முனைவர் தேவதா, ஆ. | தேம்பாவணி காட்டும் மனித மதிப்பீடுகள் | 179 |
| 50. | செல்வி பவித்ரா, மு. | தேம்பாவணியில் அறச்சிந்தனைகளும் இறைக்கொள்கையும் | 183 |
| 51. | பிரேமா கிறிஸ்டி, ஜோ. | கிறித்துவக் காப்பியம் தேம்பாவணி சுட்டும் மனிதம் | 186 |
| 52. | முனைவர் பேச்சியம்மாள், சு. | சிலுவைநாதர் திருச்சரிதம் என்னும் காப்பியத்தின் உத்திகளும் நுட்பங்களும் | 190 |
| 53. | ராஜலெட்சுமி, பெ. | சூசையின் இளமைப் பருவத்தின் மதிப்புகள் | 194 |
| 54. | ரூபி அனன்சியா, ம. | திருத்தொண்டர் காப்பியத்தில் மனித மதிப்பீடுகள் | 197 |
| 55. | முனைவர் லதா, க. | சூசையப்பர் பார்வையில் அன்னை மரியாள் | 202 |


Scanned with CamScanner

# தேம்பாவணியில் வாழ்வியல் அறம்

**முனைவர் சி. சொர்ணமாலா,**
உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை - 18

இத்தாலி தேசத்திலிருந்து இந்திய தேசம் வந்து, தமிழகத்தின் தன்னிகரில்லாத் தமிழ் மொழியைக் கற்று, இலக்கண இலக்கியங்களைப் படைத்தவர் வீரமாமுனிவர். தமிழ்க்காப்பியங்களின் சாயலோடு சொல் நயம், பொருள் நயத்துடன் 'வாடாத மாலை' தேம்பாவணியை ஆக்கியவர். கத்தோலிக்க மறைக்காப்பியமாகிய தேம்பாவணியில் காணலாகும் வாழ்வியல் அறங்களை வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**ஈகை**

மனித அறங்களில் சிறந்தது ஈகை. அதனால்தான் வள்ளுவமும் "வறியார்க்கு ஒன்று ஈவது" என்கிறது. எவ்வித பிரதிபலனும் இன்றி, எதிர்பார்ப்பும் இன்றி உற்ற நேரத்தில் ஒருவர்க்கு உதவுவதே ஈகை.

தேம்பாவணியில் சூசையும் மரியாளும் இணைந்து அன்போடு, வறியவரின் துன்பங்களை, வறுமையைத் தீர்த்தனர். அவர்கள் மனம் குளிரச் செய்தனர். ஈகைப்பண்பில் மழையைப் பெய்விக்கும் மேகம் போல இருந்தனர் என்று வீரமாமுனிவர், சூசை, மரியாள் வாயிலாக உலக மக்களுக்கு ஈகைத் தன்மையை வெளிப்படுத்துகிறார். அதனை,

**"தாய் ஒத்து ஆர்வொடு தரித்திரர்க்கு அனைத்துமே ஆகி**
**தீ ஒத்த ஆகுலம் தீர்த்து உளம் குளிர வண்முகிலாய்." (67)**

என்கிறது தேம்பாவணி. இந்த ஈகைப்பண்பானது வறியோரின் துயரைத் தீர்ப்பதற்காகவே என்பதனால், தம்மிடம் பொருள் இல்லையாயினும் இருப்போரிடம் பெற்றாவது அவர்களது வறுமையைப் போக்கி மகிழ்தல் என்னும் அறமாண்பினை வெளிப்படுத்துகிறது.

**பகிர்ந்து கொடுக்கும் பண்பு**

பண்டையத் தமிழர்களிடம் தனக்குக் கிடைக்கும் அதிக அளவுப் பொருட்களைப் பகிர்ந்து கொடுத்து, பிறரையும் மகிழச் செய்த மாண்பு இருந்தமையைச் சங்க இலக்கிய அகப்புற இலக்கியங்கள், இலக்கணங்கள் எடுத்தியம்புவதுண்டு சான்றாகப் பெருஞ்சித்திரனார் எனும் புலவரைக் கூறலாம். குமணனிடம் பெற்ற பரிசில்களை மனைவியிடம் கொடுத்து,

**"இன்னோர்க்கு என்னாது என்னோடும் சூழாது**
**வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்**
**எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே" (புறம். 163)**

என்கிறார். இப்பண்பு தமிழர்தம் மாண்புக்குச் சான்று. தேம்பாவணியிலும் சூசைக்கும் மரியாளுக்கும் குழந்தை பிறந்தபோது, அக்குழந்தையைக் காண்பதற்காக மூன்று அரசர்கள் வந்தனர். பொன்னும் பொருளும் கொண்டு வந்து வணங்கினர். அப்பொன்னையும் பொருளையும் தமக்கென வைத்துக் கொள்ளாமல் இருவரும் ஒரு பங்கைக் குருக்களுக்கும், ஒரு பங்கைத் தேவாலயத்திற்கும் மற்றுமொரு பங்கை இரப்போர்க்கும் பிரித்துக் கொடுத்தனர் என்பதை,

**"அச்செல்வ அரசர் ஈந்த நிறை செம்பொன் யாவும்**
**போந்து அரிது ஓர் பொறை என்ன**
**பேர் அரளோர், முப்பாலாமாய்ப் பிரிதல் செய்தே**
**ஓர்ந்து அரிது ஓர் முறையில்**



Scanned with CamScanner